2017 மார்ச் 24]

(உ) தென்காசி, காட்டுப் பன்றிகளால் ஏற்படும் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர், நீங்கள் பேசுங்கள்.*

***திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடையநல்லூர் தொகுதி, தென்காசிக்குட்பட்ட பகுதிகளில் வன விலங்குகளால் மக்களுக்கு அபாயம் ஏற்படுகிறது. காட்டுப் பன்றிகள் சாலைகளில் வருவதால் அடிக்கடி விபத்துகள் நடக்கின்றன. விவசாய நிலங்களில் காட்டெருமைகள் வருவதனால் பயிர்கள் சேதமடைகின்றன. ஏற்கெனவே இருந்த சோலார் மின் வேலி...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *போதும் உட்காருங்கள். மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. திண்டுக்கல் சி. சீனிவாசன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ.எம். முஹம்மது அபூபக்கர் அவர்கள் காட்டுப் பன்றிகளால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றி இங்கே சொல்லியிருக்கிறார்கள். காட்டுப் பன்றிகளினால் கோவை, தருமபுரி மற்றும் ஈரோடு மாவட்டங்களில் உள்ள விவசாய நிலங்கள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. எஸ்.பி. வேலுமணி அவர்களும், பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களும், மாண்புமிகு அமைச்சர் திரு. கே.சி. கருப்பணன் அவர்களும் நேற்று மயில்களால் ஏற்படும் பாதிப்புகளைப் பற்றிப் பேசினார்கள். காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்த வேண்டுமென்றும் சொன்னார்கள். இதுகுறித்து, தலைமை வன அலுவலரிடம் பேசி, உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்ற மாநிலங்களில் காட்டுப் பன்றிகளால் மக்களுக்கு ஆபத்து வருகிறபோது, சுடுவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அந்தத் தகவலைப் பெற்று, நமது மாநிலத்தில் அத்தகைய சூழ்நிலை இருந்தால், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் சொல்லி, காட்டுப் பன்றிகளைக் கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கை வனத் துறைமூலம் எடுக்கப்படும் என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.*